**தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபை - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஒழுங்குபடுத்தும் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஒழுங்குபடுத்தும் சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஒழுங்குபடுத்தும் சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஒழுங்குபடுத்தும் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஒழுங்குபடுத்தும் சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஒழுங்குபடுத்தும் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது ஒழுங்குபடுத்தும் சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| எதிர்வரும் ஆண்டில் தீர்த்து வைப்பதற்கு பொறுப்புக்கள் இல்லாத ரூபா 1,528,065 ஆன பணிக்கொடை ஒதுக்கீடுகள் நடைமுறையல்லா பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு பதிலாக நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்பட்டிருந்த வழுக்கள் 2022 ஆம் ஆண்டின் போது சரிசெய்து நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும். | ஊழியர் பணிக்கொடை ஏற்பாடுகள் நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் வெளிப்படுத்துதல் வேண்டும். |

### 1.5.2 நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நடைமுறைச் சொத்துக்களில் ரூபா 37,762,369 மறைப் பெறுமதியாக காணப்பட்டமையால் ஒழுங்குபடுத்தும் சபையின் குறுங்கால ஏற்ற இறக்கம் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 2017 ஆம் ஆண்டு முதல் ஒழுங்குபடுத்தும் சபை தொடர்ச்சியாக நட்டத்தை பெற்றமையின் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 33,719,154 திரண்ட நிதியம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 14,331,656 வரை 57 சதவீதத்தால் படிப்படியாக குறைவடைந்திருந்தது. | கடந்த ஆண்டுகளின் செலவினங்கள் முழுமையாக பகுப்பாய்வு செய்யப்பட்டு பதிவழிக்க முடியுமான சகல செலவினங்களும் பதிவழிக்கப்பட்டமை, தனியார் வைத்தியசாலைகளில் தாதியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட சகல செலவினங்களும் விண்ணப்பிக்கின்ற தாதியர்களின் உரிய வைத்தியசாலைகளுக்கு பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தமை, வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக பதிவு செய்த மருத்துவ நிறுவனங்களின் அளவை அதிகரிப்பதற்கும் தற்போது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமை மற்றும் அதன் மூலம் | நாட்டில் செயல்படுகின்ற சகல தனியார் மருத்துவ நிறுவனங்களையும் பதிவு செய்து வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கும், நிறுவனத்தின் செலவினங்களை குறைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்து குறுங்கால ஏற்ற இறக்கத்தை தவிர்ப்பதற்கும், நட்டமடைவதை குறைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எதிர்காலத்தில் சபை நட்டம் பெறுவதை குறைக்கும் நோக்காகக் கொண்டு இலாபம் பெறுகின்ற நிறுவனமாக ஏற்படுவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |

**1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| நிதிய மாற்றல் கணக்குகள் | 232,400 | பட்டோலை | நிதிய மாற்றல் கணக்கில் (Fund Transfer Account) காணப்பட்ட இதுவரை இனங்காண முடியாதிருந்த இந்த வழுக்கள் தொடர்பாக, மாதாந்தம் சபைக்கு சமர்பித்து கலந்துரையாடப் பட்டுள்ளதுடன் இது தொடர்பாக எங்களின் அடுத்துவரும் மாதாந்த கூட்டத்திற்கு மீண்டும் சமர்ப்பித்து சபைக்கு ஆலோசனையின் பிரகாரம் உரிய பட்டோலைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இந்த மீதிக்கான பட்டோலைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த துடன் மீதியை இனங்கண்டு தீர்த்து வைத்தல் வேண்டும். |

**1.6 செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய கணக்குகள்**

**1.6.1 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒழுங்குபடுத்தும் சபையினால் சேகரிக்கப்படுகின்ற வருடாந்த பதிவுக் கட்டண வருமானத்தில் 50 | 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு | இது தொடர்பாக சட்டத்தில் காண்பிக்கப் |

| | | |
|---|---|---|
| சதவீதம் ஒவ்வொரு மாகாண சபைக்கும் அனுப்பப்படல் வேண்டும். எனினும், ஒழுங்குபடுத்தும் சபையின் பதிவுக் கட்டண வருமானத்தில் 50 சதவீதம் மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைக்கும் வகையில் மாகாண பிரதம செயலாளருக்கு அனுப்பப்படாமல் அதற்குப் பதிலாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் போது சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டிருந்த ரூபா 4,527,835 தொகை உரிய மாகாண சபைகளின் மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் பிரகாரம் அனுப்பப்படாத பணம் ரூபா 41,880,735 ஆகும். | செய்தல்) சட்டத்தின் 3(5) உப பிரிவின் பிரகாரம் மற்றும் 2007.03.22 ஆந் திகதிய 1489/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்தல் கட்டணத்தில் 50 சதவீதம் உரிய மாகாண சபைக்கு 2011 ஆம் ஆண்டு வரையில் செலுத்தப்பட்டுள்ளதுடன் 2011 பெப்ரவரி 11 ஆந் திகதி சுகாதார அமைச்சரின் தலைமையில் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபையின் அங்கத்தவர்களுடன் நடைபெற்ற கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி மாகாண சபைகளுக்கு 50 சதவீதம் தனியான கணக்கொன்று இருக்குமிடத்து மாத்திரம் அனுப்ப வேண்டியமைக்கான தீர்மானம் மீண்டும் அங்கீகரிக்கப்பட்டமை மற்றும் ஆண்டின் போது வருடாந்த திட்டமொன்றை சமர்ப்பித்ததன் பின்னர் சபையின் அங்கீகாரத்தின் பின்னர் மாத்திரம் நிதியினை செலுத்த வேண்டுமென தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் | அமைச்சிற்கு பொறுப்பான அமைச்சரினதும், நிதி அமைச்சரினதும் அங்கீகாரம் | அலுவலக முகாமைத்துவ கூட்டம் மற்றும் மாதாந்த கூட்டத்தின் போது | நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் பொது முயற்சிகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | பெற்றுக்கொள்ளப்படாமல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 46,934,271 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. கடந்த 13 ஆண்டுகளின் போது கணக்காய்வு அறிக்கைகளில் இந்த நிலைமை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதும், உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கலந்துரையாடப்பட்டு சபையின் முன் அங்கீகாரத்துடன் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன் 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் மூலம் தனியான கணக்கொன்றை பேணிச் செல்வதற்கான அதிகாரம் சபைக்கு கிடைத்திருந்தமையால் அந்த அதிகாரத்தின் பிரகாரம் நிலையான வைப்பு கணக்கொன்று பேணிச் செல்லப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.8 மற்றும் 3.14 ஆம் பிரிவுகள் | விழா முற்பணம் மற்றும் வங்களின் மூலம் வழங்கப்படுகின்ற கடன்கள் தவிர சகல கடன் தொகைக்காகவும் 4.2 சதவீதப்படி வட்டி மாதாந்தம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 09 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 2,446,666 ஊழியர் கடனுக்காகவும் மற்றும் 2021 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 1,881,833 கடனுக்காக 2021 மே மாதம் வரையிலும் வட்டி அறவிடப்படாதிருந்ததுடன் 2021 மே மாதத்தின் போது 04 உத்தியோகத்தர் களிடமிருந்து மாத்திரம் வட்டி அறவிடப்பட்டிருந்தது. மேலும் கடன் வழங்குவதற்கு முன்னர் 272 ஆவது பொது படிவங்களின் உடன்படிக்கை எழுதி கையொப்பமிட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருக்க வில்லை. | 2018-2020 காலப்பகுதியில் ஊழியர் கடனுக்காக வட்டி அறவிடப்படாதிருந்தமை, 2021 ஆம் ஆண்டு முதல் ஊழியர் கடனுக்காக 4.2 சதவீத வட்டி அறவிடப்பட்டமை மற்றும் கடன் வழங்குவதற்கு முன்னர் முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதற்கு புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக | மீளாய்வாண்டிற்காக வருடாந்த பொருள் | வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2021 ஆம் | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 756 | மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் இறுதியின் போது நடாத்தி அது தொடர்பான தகவல்கள் உங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2007 மார்ச் 09 ஆந் திகதிய 133(1) ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கை மற்றும் 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்படக் கூடிய ஆகக்கூடிய கடன் எல்லை ரூபா 250,000 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 04 உத்தியோகத்தர் களுக்கு அந்த எல்லையினை விஞ்சி ரூபா 1,881,833 கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. | இடர் கடனின் ஆகக்கூடிய எல்லை ரூபா 250,000 ஆக இருந்த போதிலும் சபையின் முன் அங்கீகாரத்துடன் ஒழுங்கு படுத்தும் சபையினால் ஆரம்ப சம்பளத்தில் பத்து மடங்கு தனியார் கடன் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2018 திசெம்பர் 07 ஆந் திகதிய பீஈடீ/03/2018 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2021 திசெம்பர் 15 ஆந் திகதிய பீஈடீ/03/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக ஒருவருக்கு ரூபா 3,000 வீதம் மிகையூதியப் படி செலுத்த முடியுமாக இருந்த போதிலும் அதற்குப் பதிலாக ஒருவருக்கு ரூபா 13,500 வீதம் 11 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு மிகையூதியப் படி செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் ரூபா 115,500 ஆகும். | அரச துறையின் ஊழியர்களுக்காக அமுல்படும் சுற்றறிக்கை PED 03/2020 இன் பிரகாரம் மற்றும் சபையின் அங்கீகாரத்துடன் ஊழியர் செயலாற்றலை கவனத்தில் கொண்டு மிகையூதியப் படி செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதற்கு புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | சகல அரசாங்க நிறுவனங்களிலும் கைவிரல் அடையாள பதிவு இடல் இயந்திரம் பயன்படுத்துவதன் மூலம் அரசாங்க உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு வருகை தரல் மற்றும் வெளிச் செல்லல்களை உறுதிப்படுத்துவது தொடர்பான அறிக்கை வைத்துக் கொள்ளப்பட வேண்டியிருந்தமையால் 2020 யூலை 24 ஆந் திகதி ரூபா 57,240 செலவில் கைவிரல் அடையாள இயந்திரம் | கொரோனா தொற்று நோய் நிலைமையின் இடையே எமது நிறுவனத்தில் கைவிரல் அடையாள பதிவு இயந்திரம் பயன்படுத்தாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை மற்றும் இந்த நிலைமை சீரடைந்ததன் பின்னர் கைவிரல் அடையாள இயந்திரப் பதிவுகளை செய்யும் இயந்திரத்தை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அது 2022 ஏப்ரல் 20 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை வழிகாட்டிக் கோவையின் 5.2.5 ஆம் பந்தி | பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டின் பிரதியொன்று நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரிய பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்படாத பாதீடு ஆண்டின் இறுதியின் பின்னர் 2022 பெப்ரவரி 26 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்குரிய பாதீட்டு அறிக்கை குறித்துரைத்த திகதியில் உங்களுக்கு சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2021 யூன் 15 ஆந் திகதிய 21/Misc (032) ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் மற்றும் 2021 யூன் 16 ஆந் திகதிய MH/Add/Sec/Admin 1/16/2021 ஆம் இலக்க சுகாதார அமைச்சு செயலாளரின் கடிதம் | 2021 யூன் மாதம் முதல் 2021 ஆகஸ்ட் மாதம் வரையான 03 மாத காலப்பகுதிக்காக சுகாதார சேவையில் ஈடுபட்டிருக்கின்ற பதவியணியினர்களுக்கு மாதாந்தம் கொடுப்பனவு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட ரூபா 7,500 வீதம் ஆன விசேட மாதாந்த படி, ஒழுங்குபடுத்தும் சபையின் பதவியணியினருக்கு செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்படாதிருந்த போதும், அந்த வருடாந்த மாதாந்தப் படி ஒழுங்குபடுத்தும் சபையின் பதவியணியினருக்கு செலுத்துவதற்காக ரூபா 225,000 செலவிடப்பட்டிருந்தது. | பொதுத்துறையின் ஊழியர்களுக்காக அமுல்படுத்தப்படுகின்ற PED 03/2020 சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் சபையின் அங்கீகாரத்தின் படி எமது நிறுவனமும் சுகாதார அமைச்சு மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் முழுமையான மேற்பார்வையின் கீழ் காணப்படுகின்ற நிறுவனமாக இருந்தமையால் 2021 ஆம் ஆண்டின் யூன் மதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையான 03 மாத கால எல்லை வரை சுகாதார சேவைகள் பதவியணியினருக்கு செலுத்தப்பட்ட மாதத்திற்கு ரூபா 7,500 ஆன இந்த படிகள் ஒழுங்குபடுத்தும் சபையின் ஊழியர்களுக்காகவும் செலுத்தப்பட்டிருந்தது. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதற்கு இணங்காத வகையில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தி | ஒழுங்குபடுத்தும் சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எதிர்வரும் 03 ஆண்டுகளுக்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகைகள் திட்டமொன்று தயாரித்து முகாமைத்துவக் குழு மற்றும் மாதாந்த குழுவின் அங்கீகாரத்துடன் விரைவாக அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 692,194 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 6,048,680 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,356,486 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு நிர்வாக செலவினங்கள் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 09 மாகாணங்களில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 2,011 தனியார் மருத்துவ நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதும், 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பதிவு செய்த தனியார் மருத்துவ நிறுவனங்களின் எண்ணிக்கை 1,194 மாத்திரமாக இருந்தது. | மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் திட்டமொன்று எமது சபையின் அனுபவத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட கொவிட் வைரசின் காரணமாக அநேகமான மருத்துவ நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தமை மற்றும் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் குறைவடைந்தமையால் 2021 ஆம் ஆண்டின் போது பதிவு செய்தல் குறைவடைந்து வருமானம் குறைவடைந்திருந்தது. | நாடு முழுவதும் தாபிக்கப்பட்டுள்ள சகல தனியார் மருத்துவ நிறுவனங்களையும் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் பதிவு செய்த தனியார் மருத்து நிறுவனத்தால் நடாத்திச் செல்லப்பட வேண்டிய நியமங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல், தற்போது பேணிச் செல்லப்படுகின்ற நியமங்களின் மதிப்பீட்டை முறையாக அமுல்படுத்துதல், ஊழியர் தரப்பை சேர்த்துக் கொள்ளும் போது ஆகக்குறைந்த தகைமைகள் பின்பற்றப்பட வேண்டியிருந்தமையை உறுதிப்படுத்துதல் மற்றும் ஊழியர் தரப்பினருக்கு பயிற்சிகளை வழங்கும் போது ஆகக்குறைந்த நியமத்துடன் பின்பற்றப்பட வேண்டியதை கண்காணித்துக் கொள்ளல் மற்றும் வழங்கப்படுகின்ற நோயாளர்களை கண்காணிக்கும் சேவைகளின் தரத்தினை உறுதிப்படுத்துதல் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்காக முறையான திட்ட முறைமையொன்று தயாரித்து அமுல்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தவறியிருந்தது. | தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் போது மற்றும் பதிவினை வருடாந்தம் நாளதுவரையாக்கும் போது அந்த நிறுவனங்கள் அந்தந்த மாகாண சுகாதார பணிப்பாளர் அல்லது தகைமை பெற்ற உத்தியோகத்தர்கள் குழுவினால் மேற்பார்வை செய்யப்படுகின்றமை மற்றும் அதன் பின்னர் அந்தப் பதிவிற்காக தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபைக்கு அனுப்பப்படுகின்றது. | சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு முடியாதிருந்த மையால் அது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டு உரிய வழிகாட்டி, பிரமாணங்களுக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மேற்கூறப்பட்ட சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆலோசனையின் அடிப்படையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற நியதிகளின் மூலம் | தரப்படுத்தலின் கீழ் தனியார் வைத்தியசாலைகளின் தரப்படுத்தல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் ஒழுங்குபடுத்தும் சபை தாபித்ததன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக | தனியார் மருத்துவ நிறுவனங்களை தரப்படுத்து வதற்கான முன்மொழிவுத் திட்டத்தை முறையாக காண்பித்து |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சரால் தனியார் மருத்துவ நிறுவனங்களுக்காக தரப்படுத்தல் முன்மொழிவுத் திட்டமொன்று முறையாக காண்பித்து அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான திட்டமுறைமையொன்றை தயாரித்தல், தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்வதற்காக தேவையான வழிகாட்டிகளை தயாரித்தல் மற்றும் அவைகளை பிரமாணங்களுக்கு உட்படுத்துவதற்காக சுகாதார அமைச்சின் சட்டப்பிரிவின் ஊடாக சட்ட வரைவு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | அமுல்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மேற்கூறப்பட்ட சட்டத்தின் 18(2) உப பிரிவின் (எ) பந்தியின் பிரகாரம் தொடர்பொன்றை காண்பிக்கின்ற அல்லது அதிருப்திக்கு உள்ளாகின்ற நபர்களினால் ஏதாவதொரு தனியார் மருத்துவ நிறுவனத்திற்கு அல்லது அது தொடர்பான நபரிற்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற முறைப்பாட்டை கையளிக்கும் போது மற்றும் அந்த முறைப்பாட்டிலிருந்து இறுதியாக விடுவிக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய பணி நடைமுறைகள் மற்றும் விதிமுறைகள் தொடர்பான கட்டளைகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு எதிராக பொதுமக்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் தமது நிறுவன மட்டத்திலும் மற்றும் ஒழுங்குபடுத்தும் சபையின் மூலமும் பரீட்சிப்பதற்கு உரிய வழிகாட்டியொன்று தயாரிக்கப்பட்டு அந்த வழிகாட்டிக்கு இணங்க சபையின் அங்கீகாரத்துடன் பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | முறைப்பா டொன்றை கையளிக்கும் போது மற்றும் அந்த முறைப்பாட்டின் இறுதியாக விடுவிக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய பணி நடைமுறைகள் அல்லது தீர்வுகள் தொடர்பாக கட்டளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒழுங்குபடுத்தும் சபையினால் சேகரிக்கப்படுகின்ற வருடாந்த பதிவு கட்டண வருமானத்தில் நூற்றுக்கு ஐம்பது சதவீதம் மாகாண பிரதம செயலாளருக்கு | 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்தல் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் பிரகாரம், சட்டத்தை திருத்துவதற்குரிய | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அனுப்புவதற்கு முன்னர் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் தனியார் சுகாதார பிரிவினை அபிவிருத்தி செய்வதற்குரிய வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டுடன் வருடாந்த முன்மொழிவொன்று சமர்ப்பிப்பதற்கும், ஆண்டின் இறுதியில் செலவினங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையொன்று சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கி 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 3(5) ஆம் பிரிவை திருத்துவதற்கும் 2015 யூலை 09 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து 06 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் சட்டம் திருத்தப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் சபையின் அங்கீகாரத்துடன் அமைச்சின் சட்டப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப் படுகின்றதுடன் அதன் பிரகாரம் தற்போது பதிவுக் கட்டண வருமானத்தில் 50 சதவீதம் உரிய மாகாண சபைகளுக்காக செலுத்தப்படுகின்றது. | |
| (ஆ) | மேற்கூறப்பட்ட சட்டத்தின் 2(1) உப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், சகல தனியார் மருத்துவ நிறுவனங்களும் பதிவு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் பதிவு செய்யப்பட வேண்டிய தனியார் மருத்துவ நிறுவனங்களை இனங்காண்பதற்கு, பதிவினை செய்வதற்கு மற்றும் பதிவு செய்யாத நிறுவனங்கள் தொடர்பாக சட்டத்தின் 4 ஆவது பிரிவின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு முறையான திட்ட முறைமையொன்று ஒழுங்குபடுத்தும் | மேலும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது எங்களின் தரவு முறைமையின் பிரகாரம் பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் மாகாண மட்டத்தில் வேறுபடுத்தப்பட்டு, அவை தொடர்பாக கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக உரிய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். மேலும் பதிவு செய்யாது | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபையினால் தயாரித்து அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நடாத்திச் செல்லப்படுகின்ற தனியார் மருத்துவ நிறுவனங்களை இனங்கண்டு அதற்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் உரிய மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்களுக்கு தற்போது சபை ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். மேலும் அது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் தேவையாயின் அதற்காக ஏற்படுகின்ற செலவினங்களை வழங்குவற்கும் ஒழுங்குபடுத்தும் சபை நடவடிக்கை எடுத்திருந்ததையும் அறியத்தருகின்றோம். | |
| (இ) | மேற்கூறப்பட்ட சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட நிர்வாக சபைக்கு மேலதிகமாக 09 அங்கத்தவர்களை உடைய அலுவலக முகாமைத்துவ குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் முறையான அங்கீகாரமின்றி ஒரு கூட்ட தடவைக்காக ஒருவருக்கு ரூபா 5,000 வீதம் மீளாய்வாண்டின் போது ரூபா 105,000 படியாக செலுத்தப்பட்டிருந்தது. | சபையின் அங்கத்தவர்களுக்கு மாதாந்த செயலமர்வினை உள்ளடக்கி உப கூட்டங்களுக்கு சமூகமளிக்கும் போது வருகை தரல் படி செலுத்தப்படுவதுடன் அந்த சகல கொடுப்பனவுகளும் சபையின் அங்கீகாரத்துடன் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதற்காக இணங்கா வகையில் மேற்கொள்ளப் படுகின்ற கொடுப்பனவுகள் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்படல் வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண சபைகளின் செலவினங்களை செய்வதற்கு எந்தவொரு | மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பாடுகளும் சட்டத்தில் வழங்கப்படாதிருந்த போதும் மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்டு சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களின் தொலைபேசிப்படி, போக்குவரத்து செலவினம் மற்றும் சம்பளமாக மீளாய்வாண்டின் போது ரூபா 1,329,835 தொகை ஒழுங்குபடுத்தும் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் பிரகாரம் மேல்மாகாண சபைக்கு செலுத்த வேண்டிய பதிவுக் கட்டண வருமானத்தில் அந்த தொகை குறைக்கப்பட்டிருந்தது. | நியமிக்கப்பட்ட ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட மருத்துவர்கள் மேல்மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பரிந்துரையின் அடிப்படையிலும் ஒழுங்குபடுத்தும் சபையின் அங்கீகாரத்துடனும் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த வைத்தியர்களுக்கு உரிய சம்பளம், போக்குவரத்து செலவினம், தொலைபேசிக் கட்டணம் மற்றும் உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் அந்த மாகாண சபைக்கு செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்த 50 சதவீத தொகையில் ஆகும். | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஒழுங்குபடுத்தும் சபையின் கீழ் பதிவு செய்கின்ற தனியார் மருத்துவ நிறுவனங்களின் பதிவினை காட்சிப்படுத்தும் பெயர் பதாகை தயாரித்தல் ஒழுங்குபடுததும் சபையின் பணியாக இல்லாதிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான 11 ஆண்டுகளின் போது புதிய பெயர் பதாகைகள் தயாரித்தல் மற்றும் பழைய பெயர் பதாகைகளை தயாரித்தல் (Refill) இற்காக ஒழுங்குபடுத்தும் சபையினால் ரூபா 17,085,102 செலவிடப்பட்டிருந்தது. | எமது நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட சகல கொள்வனவுகளும் சரியான திட்ட முறையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் அவ்வாறே தற்போது வரையில் மும்மொழிகளிலும் பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்து வழங்குனர்களை பதிவு செய்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மற்றும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் கீழ் வெளிப்படையாக இருக்க வேண்டிய பெறுகைகள் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் மூலம் அதிகாரம் கிடைத்துள்ள செயற்பாடு களுக்காக மாத்திரம் செலவினங்களை செய்தல் வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒழுங்குபடுத்தும் சபை ஆரம்பித்த ஆண்டு முதல் சபைக்குரிய பணிப்பொறுப்புக்கள் மற்றும் அதன் அளவினை இனங்கண்டு அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கும் மற்றும் ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி பதவிகளுக்காக 10 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். | ஆரம்பத்திலிருந்து இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் நியமித்து நிறுவனம் முறையாக நடாத்திச் செல்வதற்கும், அவ்வவ்போது சரியான திட்ட முறைமையின் பிரகாரம் ஊழியர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கும் மற்றும் நிறுவனத்தின் பணிப்பொறுப்புக்களை இனங்கண்டு அதற்கு ஈடுகொடுக்கின்ற வகையில் ஆட்சேர்ப்பு நடைமுறையினை (SOR) தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கும் அதன் பிரகாரம் ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 133 மற்றும் 2019 சனவரி 12 ஆந் திகதிய டீஎம்ஏ/1-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் ஒழுங்குபடுத்தும் சபைக்காக உள்ளக கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒழுங்குபடுத்தும் சபைக்காக உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்படாதிருந்தமை, கணக்காய்வு நடவடிக்கைகள் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் மூலம் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றமை மற்றும் எதிர்காலத்தில் | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உள்ளக கணக்காய்வு அலுவலகத்தை தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |

**4.2 கணக்காய்வுக் குழுக் கூட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 சனவரி 12 ஆந் திகதிய டீடிம்ஏ/1-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம், 01 காலாண்டு வீதம் வருடமொன்றிற்கு 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் ஒழுங்குபடுத்தும் சபையினால் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை நடாத்துவதற்கு வசதியீனமாக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது இந்த நிலைமையை மாற்றியமைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயலாளரால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு ''2030 இன் நிகழ்ச்சி நிரல்'' தொடர்பாக ஒழுங்குபடுத்தும் சபையினால் அறிந்திருக்காமையின் காரணமாக தமது விடயப்பரப்பிற்கு கீழ் வருகின்ற பணிகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய கட்டங்களும் இலக்கினை அடைந்து கொள்ளப்படுவதை அளவிடுவதற்கான | உரிய சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு ''2030'' இன் நிகழ்ச்சி நிரல்'' தொடர்பாக அறிந்திருந்ததுடன் அதன் பிரகாரம் சுகாதார அமைச்சின் மூலம் விநியோகிக்கப்பட்ட 2019.02.13 ஆந் திகதிய 01-13/2019 ஆம் இலக்க சுற்றறிக்கைக்குரிய ஒழுங்குபடுத்தும் சபை தொடர்பான பணிகள் இனங்காணப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருந்தமை, அவ்வாறே தற்போது வரையில் | உரிய சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு ''2030'' இன் நிகழ்ச்சி நிரல்'' தொடர்பாக ஒழுங்குபடுத்தும் சபைக்கு அறிவித்து தமது விடயப் பரப்பின் கீழ் வருகின்ற பணிகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த |

| | | |
|---|---|---|
| குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறைந்து செல்லும் நோய்கள் ஒழிக்கும் அலகு மற்றும் தேசிய புற்றுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்களுடன் சேர்ந்து மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்கி இலக்கினை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்திலும் அவ்வாறான ஒத்துழைப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய கட்டங்களும் இலக்குகளின் அடிப்படையில் அடைதலை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |